# மன்ற நிகழ்விற்கான கூட்டப்பொருள்

**பொருள் எண்: 1**

வடலூர் நகராட்சி ஆணையாளர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜனவரி 2024 நாட்குறிப்பேடு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**பொருள் எண்: 2**

இந்நகராட்சியில் கொசுபெருக்கம் , டெங்கு மற்றும் காய்ச்சல் கட்டுப்பாடு பணிகளுக்காக கொசு தடுப்பு பணியாளர்களை பொதுமக்கள் நலன்கருதி மேற்கண்ட பணியாளர்களைதேவையான அளவுக்கு கொசு தடுப்பு பணியாளர்களை (DBC Worker) வாரந்திர அட்டவணையில் பணிபுரிய வேண்டிய நபர்களை தங்கள் பகுதிகளில் 300 வீடுகளுக்கு ஒரு நபர் வீதம் பணி நீடிப்பு செய்து பணியில் ஈடுபடுத்திடவும் துணை இயக்குநர் , சுகாதார பணிகள் (பொ) கடலூர் அவர்களின் கடித ந.க.எண்.6873/அ5/2019 நாள்.26.12.2023ல் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, இதன் அடிப்படையில் தற்போது இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் 40 கொசு தடுப்பு பணியாளர்களை ஜனவரி 2024 முதல் மார்ச் 2024 வரை முடிய உள்ள காலத்திற்கு பணிபுரிந்திடவும், இம்மாதத்திற்கு இப்பணியாளர்களுக்கு வழங்கப்பட வேண்டிய உத்தேச ஊதியத்தொகை ரூ.15,00,000/- (பதினைந்து லட்சத்திற்கு மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-** பொதுமக்களின் பணிக்காக தற்போது பணி புரிந்து வரும் கொசு தடுப்பு பணியாளர்களை ஜனவரி 2024 முதல் மார்ச் 2024 வரை பணிபுரியவும் அதற்கான ஊதியத்தை வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.03/2022/எச்1**

**பொருள் எண்: 3**

வடலூர் நகரட்சியில் நகராட்சி அலுவலக பின்புறம் உள்ள அலுவலக கழிவறைத்தொட்டி நச்சுகழிவு நீர், வார்டு எண்.25, சேராக்குப்பம் சின்னகாலனி பொதுக்கழிப்பிடம் செப்டிக் டேங், பாட்டை தெரு ஆபத்தாரணபுரம் MCC–ல் இருந்து வரும் உபரி உரக்கழிவு நீர், ஆர்.சி தோமையார் நகர் பொதுக்கப்பிட கழிவு நீர் தொட்டி மேற்கண்ட நான்கு இடங்களிலும் மொத்தம் 24 நடை கழிவு நீர் அகற்றி சுத்தம் செய்யப்பட்டுள்ளது. எனவும், துப்புரவு மேற்பார்வையாளர் மற்றும் துப்புரவு ஆய்வாளர் அவர்களின் 31.01.2024 ம் நாளிட்ட குறிப்பின் அடிப்படையில் அப்பணிகளை செய்தமைக்கும், அதற்கான செலவினத்தொகை ரூ.45,600/– மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

1. வசந்தப்பிரியா (நடை ஒன்றுக்கு ) செப்டிக்டேங் – 1900/–
2. சக்திவேல் செப்டிக்டேங் – 1975/–
3. வசந்த் செப்டிக் டேங் – 2000/–

**அலுவலக குறிப்பு :-** 1. மேற்கண்ட விலைப்பட்டியலில் வசந்தபிரியா செப்டிக்டேங் குறைவான விலைப்புள்ளி கோரியுள்ளதால் மேற்கண்ட பணிக்கு அனுமதித்து நகர்மன்ற முன்அனுமதி வேண்டப்படுகிறது.

2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்றுபணி மேற்கொணடமைக்கும் அதற்கான செலவீனம் மேற்கொண்டமைக்கும் மன்றமுன் அனுமதி அனுமதிக்கப்படுகிறது.

**ந.க.எண்.74/2024/எச்1**

**பொருள் எண்: 4**

வடலூர் நகரட்சியில் 01.02.2024 முதல் 31.03.2024 வரையிலான காலங்களுக்கு ஒப்பந்த பணிக்காக பிடித்தம் செய்யப்பட்ட GST தொகையினை GSTக்கான வலைதளத்தில் பதிவு ஏற்றம் மற்றும் பதிவிறக்கம் செய்யவும் ஒப்பந்ததாரர் GST தொகை ஒப்பந்ததாரர் TINஎண்ணில் பதிவேற்றம் செய்ய பட்டயக் கணக்கர் அவர்களுக்கு வழங்க ஆகும் தேராய செலவினம் ரூ.75,000/– நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் முன் அனுமதிக்கு வைக்கப்முடுகிறது.

**அலுவலக குறிப்பு :-** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி தொகை வழங்கிட முன் அனுமதி வழங்கிட அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.4482/2024/பி1**

**பொருள் எண்: 5**

வடலூர் நகரட்சியில் **01.02.2024** முதல் **31.03.2024** வரையிலான ஐந்து காலாண்டுகளுக்கு ஒப்பந்த பணிக்காக பிடித்தம் செய்யப்பட்ட வருமான வரி தொகையினை வருமான வரிதுறைக்கான வலைதளத்தில் வருமான வரி கணக்கில் பதிவு ஏற்றம் மற்றும் பதிவிறக்கம் செய்யவும் வங்கி வருமான வரி கணக்குடன் ஒப்பிட்டு சரி செய்து (E-Filing) செய்ய தேராய செலவினம் தொகை **ரூ.1,25,000/–** நகராட்சியின் வருவாய் நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் முன் அனுமதிக்கு வைக்கப்முடுகிறது.

**அலுவலக குறிப்பு :-** 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. அவசர அவசியம் கருதி தொகை வழங்கிட முன் அனுமதி வழங்கிட அனுமதிக்கலாம்.

**ந.க.எண்.4482/2024/பி1**

**பொருள் எண்: 6**

வடலூர் நகராட்சியின் வருவாய் நிதி, குடிநீர் மற்றும் வடிகால் நிதி மற்றும் கல்வி நிதிக்கான **2023 – 2024**ம் ஆண்டின் திருத்திய மதிப்பீடு மற்றும் **2024 –2025** ஆண்டிற்கான திட்ட மதிப்பீடும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு 1. மன்றம் அனுமதிக்கலாம்

**ந.க.எண்.138 /2024/பி1**

**பொருள் எண்: 7**

வடலூர் நகராட்சிக்குட்ப்பட்ட திருஅருட்பிரகாச வள்ளலார் வாழ்ந்து மறைந்த இடமான சத்திய ஞானசபையில் தைப்பூசம் திருவிழா **2024** ல் **24.01.2024** முதல் **27.01.2024** வரை மிக சிற்பபாக கொண்டாப்பட்டது. வள்ளலாரின் சிறப்புகளை பற்றியும் தைப்பூசம் திருவிழா பற்றியும் செய்தித்தாளில் விளம்பரம் செய்யப்பட்டது. அதற்கான செலவினம் ரூ.**2.00** இலட்சம் மட்டும் மன்றம் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.றது. கீழ்கண்ட செய்தித்தாளில் விளம்பரம் செய்யவும், அதற்கான தொகை வழங்கவும் மன்றத்தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | செய்தித்தாள் பெயர் | ரசீது எண் / தேதி | தொகை CGST SGST உட்பட |
|---|---|---|---|
| 1. | தினகரன் | Kal Publication (P)Ltd 3300467977 / 25.01.2024. | ரூ. 18,000/– |
| 2. | தினமணி | Exprees Publications (Madurai) private limited TN11345453 / 25.01.2024. | ரூ. 15000/– |
| 3. | மாலைமலர் | Malar Publication Limited CUD – D24010200 (25.01.2024) | ரூ. 9072/– |
| 4. | தினபூமி | Thina Boomi – Bill No 120266, 25.01.2024 | ரூ. 9975/– |
| 5. | தமிழ்முரசு | Kal Publication (P)Ltd 3300468241 / 25.01.2024. | ரூ. 12000/– |
| 6. | தினத்தந்தி | The Daily Thanthi 2324CDL431026272 / 25.01.2024. | ரூ. 16027/– |
| 7. | தினமலர் | Dinamalar PD 23211503 / 25.01.2024. | ரூ. 15456/– |
| 8. | இந்து தமிழ் திசை | KN MEDIA SERVICE | ரூ. 15708/– |
| | | மொத்தம் | ரூ. 1,11,238/– |

அலுவலக குறிப்பு: 1. மன்றம் அனுமதிக்கலாம்.

**கோப்பு எண். 72/2024/H1**

**பொருள் எண்: 08**

வடலூர் நகராட்சி வார்டு எண் 01, பூசாலிக்குப்பம் அரசு ஆரம்பப்பள்ளியில் முதலமைச்சரின் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தின் 2023 – 24ன் கீழ் வடலூர் நகராட்சிக்குட்பட்ட 08 பள்ளிகள் மற்றும் குறிஞ்சிப்பாடி பேரூராட்சிக்குட்பட்ட 08 பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவிகளுக்கு உணவுகள் தயார் செய்யும் மைய சமையற்கூடம் முன்பகுதியில் மழைகாலங்களில் வாகனங்களில் உணவு ஏற்ற ஏதுவாக பேவர் பிளாக் (Paver Block) பதித்தல் பணி , மேலும், அதிகாலையில் உணவு சமைக்கும் நேரங்களில் அவ்வப்போது மின்வெட்டு ஏற்படுவதால் UPS அமைக்கும் பணி மற்றும் பள்ளி மாணவர்கள் காலை உணவு அமர்ந்து உண்ண ஏதுவாக பாய் கொள்முதல் செய்யும் பணிகள் ஆகியவற்றிற்கு மதிப்பீடு ரூ.2.70/– இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது. வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு 1, மன்றம் அனுமதிக்கலாம்.
:

(ந.க.எண். 4463 /2023/இ1)

**பொருள் எண்: 09**

வடலூர் நகராட்சி திருஅருட்பிரகாச வள்ளலார் தெய்வ நிலையத்தில் 154வது தைப்பூச திருவிழாவிற்கு தற்காலிக கழிவறை அமைக்கும் பணி , பொருட்கள் வைப்பு அறை, தற்காலிக மருத்துவ சிறப்பு முகாம் அமைக்கும் பணி, குடிநீர் வசதி செய்தல், சபைக்கு செல்லும் பிரதான சாலையில் சேதம் அடைந்துள்ள பள்ளங்களில் Wet Mix Macadam (WMM) அமைத்தல் மற்றும் தற்காலிக மின்விளக்குகள் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ 4.00/– இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது. பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1, மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். /2023/இ1)

**பொருள் எண்: 10**

வடலூர் நகராட்சி வார்டு எண் 01, பூசாலிக்குப்பம் அரசு ஆரம்பப்பள்ளியில் முதலமைச்சரின் காலை சிற்றுண்டி வழங்கும் திட்டத்தின் 2023 – 24ன் கீழ் வடலூர் நகராட்சிக்குட்பட்ட 08 பள்ளிகள் மற்றும் குறிஞ்சிப்பாடி பேரூராட்சிக்குட்பட்ட 08 பள்ளிகளில் பயிலும் மாணவ/மாணவிகளுக்கு உணவுகள் தயார் செய்யும் மைய சமையற்கூடம் முன்பகுதியில் மழைகாலங்களில் வாகனங்களில் உணவு ஏற்ற ஏதுவாக பேவர் பிளாக் (Paver Block) பதித்தல் பணி , மேலும், அதிகாலையில் உணவு சமைக்கும் நேரங்களில் அவ்வப்போது மின்வெட்டு ஏற்படுவதால் UPS அமைக்கும் பணி மற்றும் பள்ளி மாணவர்கள் காலை உணவு அமர்ந்து உண்ண ஏதுவாக பாய் கொள்முதல் செய்யும் பணிகள் ஆகியவற்றிற்கு மதிப்பீடு ரூ.2.70/– இலட்சம் தயார் செய்யப்பட்டுள்ளது. வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு : 1, மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 4463 /2023/இ1)

நகர்மன்ற தலைவர்
வடலூர் நகராட்சி

## வடலூர் நகராட்சி

## *மன்றக் கூட்ட அழைப்பிதழ்*

*************

2024 ம் ஆண்டு ஜனவரி மாதம் **30.01.2024**.திங்கள் கிழமை காலை **10.30** மணிக்கு நகர் மன்றத்தின் சாதாரண கூட்டம் நடைபெறும். அதற்கான மன்றபொருள்கள் இத்துடன் இணைத்து அனுப்பி வைக்கப்படுகிறது. அவ்வமயம் தாங்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நகர்மன்ற தலைவர்,
வடலூர் நகராட்சி.